

தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணத்தில் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 57 நினைவு தினத்தை முன்னிட்டு மாவட்டக் கழக பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. தலைமையில் மாவட்டக் கழக அலுவலகத்திலிருந்து மகாமகம் குளம் அருகே அமைந்துள்ள அண்ணா சிலை வரை அமைதி ஊர்வலமாக சென்று அண்ணா திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன் உள்ளிட்ட மாநகரக் கழக நிர்வாகிகள், பகுதிச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மண்டலக்குழு தலைவர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், பகுதி மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் உள்ளனர்.



சேலம் வடக்கு சட்டமன்ற தொகுதியில் தமிழ்நாடு தலை குனியாது பரப்புரை கூட்டம் தில்லை நகரில் நடைபெற்றதில் கழக விளையாட்டு அணி செயலாளர். தயாநிதி மாறன் கலந்து கொண்டு பேசினார். இக்கூட்டத்தில் அமைச்சர் இரா.இராஜேந்திரன், பொருளாளர் மு.கார்த்திகேயன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.டி.மணி, கழக விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர் பி.கே.பாபு, பகுதி செயலாளர் மனமேடு மோகன், ஏ.எஸ்.சரவணன், மாநகர பொருளாளர் எம்.எம்.செரீப், மாநகர விளையாட்டு அணி அமைப்பாளர் ஆனந்த கண்ணன், வழக்கறிஞர் நரேஷ் பாபு. ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சென்னையில் இன்று நடைபெறும் நன்றி அறிவிப்பு மாநாட்டில்

# தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தினர் திரளாகப் பங்கேற்க முடிவு!

## நா.சண்முகநாதன் அறிக்கை!

புதுக்கோட்டை, பிப்.8



ஆசிரியர் அரசு ஊழியர்களுக்கு தமிழ்நாடு புதிய உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டம் அறிவித்த தமிழக முதல்வருக்கு ஜாக்டோ - ஜியோ பேரமைப்பின் சார்பில் சென்னையில் இன்று (பிப்ரவரி 8) நடைபெறும் நன்றி அறிவிப்பு மாநாட்டில் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தின் சார்பில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என மாநில பொதுச் செயலாளர் மன்றம் நா.சண்முகநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது:

தமிழ்நாட்டின் ஆசிரியர், அரசு ஊழியர்களின் பிரதான கோரிக்கையான 22 ஆண்டுகளாக தொடர்ந்து போராடி வந்த பங்கேற்பு ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்துவிட்டு தமிழ்நாடு அரசின் உறுதி அளிக்கப்பட்ட ஓய்வு திட்டத்தை தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களால் நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

22 ஆண்டுகால கோரிக்கைக்கு தீர்வு காணும் வகையில் ஓய்வு திட்டத்திற்கான அறிவிப்பினை தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பது ஒட்டுமொத்த ஆசிரியர்கள் ,அரசு ஊழியர் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

தேர்தல் அறிக்கையில் சொன்னவாறு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் ஆசிரியர்கள்,அரசு ஊழியர்களின் வாழ்வாதார கோரிக்கையை நிறைவேற்றி இருக்கிறார்.

இந்த அறிவிப்பானது பணி நிறைவு பெற்ற ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையினை ஏற்படுத்தி உள்ளது.

பணி நிறைவு பெற்றவர்களும் பயன்பெறும் வகையில் கருணைத்தொகை அறிவித்திருப்பதையும் வரவேற்று மகிழ்கிறேன்.

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனையும் அவர்களின் குடும்பத்தின் எதிர்காலத்தையும் மனதில் கொண்டு, தொலைநோக்குப் பார்வையுடனும் நடைமுறை சாத்தியங்களுடனும் கூடிய வகையில், அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் 22 ஆண்டு கால கோரிக்கையை நிறைவேற்றி, பழைய ஓய்வூதியத் திட்டத்திற்கு இணையான ஓய்வூதியத்தையும், பணப் பயன்களையும் பெற வழிவகுக்கும் வகையில் செயல்படுத்தப்பட உள்ள இந்த தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தினை,

அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஒருமனதாக வரவேற்பதோடு சென்னையில் ஜாக்டோ - ஜியோ பேரமைப்பின் சார்பில் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் பிப்ரவரி 8-ஆம் தேதி நடைபெறும் நன்றி அறிவிப்பு மாநாட்டிற்கு தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் சார்பில் ஆசிரியர்கள் அனைவரும் கலந்து கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினை தெரிவிக்க வேண்டுகிறேன்.

தன் வாழ்நாளில் ஆசிரியர் அரசு ஊழியர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை வழங்கிய கலைஞர் அவர்களின் வழியில் தொடர்ந்து ஆசிரியர் அரசு ஊழியர்களின் பாதுகாவலராக தமிழ்நாடு முதல்வர் அவர்கள் இருந்து வருகிறார்.

எனவே உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக தமிழ் இனம் காக்க பாடு பட்டுக் கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவிக்க அனைவரும் அலைகடலென சென்னை நோக்கி புறப்படுவீர் என தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றம் மாநிலப் பொதுச்செயலாளர் மன்றம் நா.சண்முகநாதன் தனது செய்திக் குறிப்பில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



தருமபுரி கிழக்கு மாவட்டம், நல்லம்பள்ளி மேற்கு ஒன்றியம், பாலஜங்கமனஹள்ளி ஊராட்சியில் தருமபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி. "உங்களைத் தேடி உங்கள் ஊராட்சியில்" கழக நிர்வாகிகள் சந்திப்பு கூட்டத்தில் கலந்து கொண்டு நிர்வாகிகளுடன் கலந்துரையாடினார்.உடன் தொகுதி பார்வையாளர் செங்குட்டுவன்,ஒன்றிய செயலாளர் என்.பி.பெரியண்ணன், மாவட்ட நிர்வாகி ரேணுகாதேவி, ஏலகிரி நட்ராஜ் உள்ளிட்ட தி.மு.க.வினர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க. இராசாராம்
### பிப்ரவரி 8 (2008)



சேலம் மாவட்டத்தில் தொடக்கக் காலத்தில் கழகத்தை வளர்க்க அரும்பாடுபட்டவர்.

திராவிட இயக்க மூத்த முன்னோடிகளில் ஒருவராகவும் – தந்தை பெரியார் அவர்களின் அணுக்கத் தொண்டர்களில் ஒருவராகவும் விளங்கினார்.

இரண்டு முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும், தலைவர் கலைஞர் அமைச்சரவையில் 1971ஆம் ஆண்டு முதல் 1976ஆம் ஆண்டு வரை அமைச்சராகப் பணியாற்றியவர்.

1980 முதல் 1984 வரை தமிழக சட்டமன்ற பேரவையின் தலைவராகவும் பணியாற்றினார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் சிகிச்சைக்காக வெளிநாடு சென்றபோது இவரும் உடன் சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## சென்னையில் கார்ல் மார்க்ஸ் முழு உருவச் சிலை! முதலமைச்சருக்கு நன்றி!



கார்ல் மார்க்ஸ்

மனிதகுலச் சிந்தனைமீது
மேலதிகத் தாக்கம்
செலுத்திய
மெய்யாளன்

பூகம்பம் இல்லாமல்
பூமியை அசைத்தவன்

உழைப்பால் உலகை
ஒன்றுபடுத்த நினைத்து
நாடற்றவனாய்ச்
செத்துப்போனவன்

அவன் எலும்புகளை
வறுமையின் ரம்பப் பற்கள்
அறுத்த போதும்
"தத்துவத்தின் வறுமை"
எழுதியவன்

ஆடைகளை
அடமானம் வைத்து
வெளிவர இயலாமல்
வீட்டுக்குள் முடங்கியவன்

குழந்தையின் காலணிகளை
அஞ்சல் செலவுக்கு
அடமானம் வைத்தவன்

மதங்களுக்கெதிராய்
மதமற்ற மதம் கண்டவன்

அறிவுக் காதல்
அவன்மீதெனக்கு

31.05.1993
லண்டன் ஹைகேட்டில்
மார்க்ஸின்
கல்லறை கண்டடைந்தேன்;
முட்புதர் களைந்து
மலர் வளையம் வைத்தேன்

கல்லறையில் உள்ளது
மார்பளவுச் சிலைதான்

சென்னையில்
வான்முட்டி நிற்பது
முழு உருவச் சிலை

நன்றி
முதலமைச்சர் அவர்களே!



கவிப்பேரரசு
**வைரமுத்து**

### பதப்படுத்தப்பட்ட உணவுகளில் ஆபத்தான சேர்மங்கள்:

# மக்கள் சுகாதாரத்தில் ஒன்றிய அரசு அலட்சியமா?

## ஒன்றிய அமைச்சரிடம் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. கேள்வி!

புதுடெல்லி, பிப். 8—

பதப்படுத்தப்பட்ட உணவுகளில் பயன்படுத்தப்படும் தீங்கு விளைவிக்கும் உணவு சேர்மங்கள் மற்றும் செயற்கை நிறங்களால் பொதுச் சுகாதாரத்திற்கு ஏற்படும் அபாயங்கள் குறித்து, நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான, கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி, ஒன்றிய அமைச்சருக்கு கேள்வி எழுப்பி உள்ளார்.

இந்திய அரசு சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்திடம், ,

டைட்டானியம் டைஆக்சைடு, சன்செட் யெல்லோ, டார்ட்ரசின், அலூரா ரெட் ஏசி போன்ற தீங்கு விளைவிக்கும் உணவு சேர்மங்கள் மற்றும் செயற்கை நிறங்கள் பதப்படுத்தப்பட்ட உணவுகளில் பயன்படுத்தப்படுவதால் மனித உடலுக்கு ஏற்படும் சுகாதார பாதிப்புகள் குறித்து அரசு அறிந்துள்ளதா? என அவர் கேள்வி எழுப்பினார்.

மேலும், இச்சேர்மங்கள் புற்றுநோய் உண்டாக்கும் தன்மை அல்லது அலர்ஜி ஏற்படுத்தும் அபாயம் கொண்டதா என்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அறிவியல் ஆய்வுகளின் முடிவுகள் என்ன?

இதுவரை அரசால் தடை செய்யப்பட்ட உணவு சேர்மங்களின் எண்ணிக்கை மற்றும் விவரங்கள் என்ன?

சர்வதேச அளவில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை கருத்தில் கொண்டு, இந்தியாவில் இவ்வகை சேர்மங்களை ஒழுங்குபடுத்த அல்லது தடை செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

என தொடர் கேள்வி கேட்டுள்ளார் |.

இதற்கு பதிலளித்த சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சக ஒன்றிய அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ்,

மனிதர்கள் பாதுகாப்பான மற்றும் சுத்தமான உணவை பெறுவதை உறுதி செய்வது உணவு பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் ஆணையம் (FSSAI) இன் முக்கிய பொறுப்பாகும் என்று தெரிவித்தார்.

உணவு பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் விதிமுறைகள், 2011ன் படி, உணவுகளில் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ள செயற்கை நிறங்கள் மற்றும் சேர்மங்கள், சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட



கோடெக்ஸ் அலிமென்டாரியஸ் ஆணையத்தின் தரநிலைகளுடன் ஒத்திசைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் விளக்கினார்.

மேலும், உணவு சேர்மங்களுக்கான தரநிலைகள், சுயாதீன அறிவியல் குழுக்கள் வழங்கும் அறிவியல் கருத்துகளின் அடிப்படையில் உருவாக்கப்படுகின்றன என்றும், புதிய அறிவியல் ஆதாரங்கள் மற்றும் உலகளாவிய சிறந்த நடைமுறைகளை கருத்தில் கொண்டு அவை அவ்வப்போது மறுஆய்வு செய்யப்படுகின்றன என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பொதுமக்களின் உணவு பாதுகாப்பு குறித்து கேள்வி எழுப்பிய கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பியின் இந்த நடவடிக்கை, மக்கள் நலன் சார்ந்த அரசியல் தலையீடாக பாராட்டுகளை பெற்றுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மா.பொ. வேதாசலம்
### பிப்ரவரி 8 (1982)



தந்தை பெரியார் கொள்கையால் ஈர்க்கப்பட்டு திராவிடர் கழக உறுப்பினரானார். பின்னர் கழகம் துவங்கியபோது, அந்தநாள் முதல் இறுதி வரை கழக உறுப்பினராக விளங்கினார்.

மாதவரம் நகரச் செயலாளர், ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

மூலக்கடை, மாதவரம் மற்றும் சுற்றுப்பகுதிகளில் கழகம் வளர்த்தவர். மிசா சிறைவாசம் உட்பட பத்து முறை சிறைக்கு சென்றவர்

"சிரித்துக்கொண்டேயிருக்கும் முகம்! குள்ள உருவம்! எளிய தோற்றம்! நிமிர்ந்த நோக்கு! சின்னத் தேர் ஒன்று அசைந்து வருவது போன்ற அமைதியான நடை" என தலைவர் கலைஞர் அவர்கள் மாதவரம் வேதாசலம் மறைந்தபோது அந்தோ! மாதவரம் வேதா! என கலைஞர் கடிதத்தில் சிறப்பித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**